මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல : PE/2024/54

2024.11.03

## பாராளுமன்றத் தேர்தல் – 2024.11.14

## வாக்களித்தல் மற்றும் விருப்புக்களை அடையாளமிடல் பற்றிய சுருக்கமான விளக்கம்

வாக்குச் சீட்டின் மாதிரி (1 ஆவது படம்)

| | | |
|---|---|---|
| அரசியல் கட்சி | * | |
| அரசியல் கட்சி | * | |
| அரசியல் கட்சி | * | |
| அரசியல் கட்சி | * | |
| அரசியல் கட்சி | * | |
| சுயேச்சைக் குழு 1 | * | |
| சுயேச்சைக் குழு 2 | * | |
| சுயேச்சைக் குழு 3 | * | |
| சுயேச்சைக் குழு 4 | * | |
| சுயேச்சைக் குழு 5 | * | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

வாக்குச் சீட்டின் மாதிரி (2 ஆவது படம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசியல் கட்சி | * | | அரசியல் கட்சி | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 1 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 2 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 3 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 4 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 5 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 6 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 7 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 8 | * | |
| அரசியல் கட்சி | * | | சுயேச்சைக் குழு 9 | * | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |

* *ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்*

1. பொலன்னறுவை, மொணராகலை, கேகாலை ஆகிய தேர்தல் மாவட்டங்களின் வாக்குச் சீட்டுக்கள் மேற்படி 1 ஆவது படத்தின் பிரகாரம் ஒரு நிரலிலும், ஏனைய தேர்தல் மாவட்டங்களின் வாக்குச் சீட்டுக்கள் 2 ஆவது படத்தின் பிரகாரம் 2 நிரல்களாகவும் அச்சிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் உரிய வாக்குச் சீட்டின் மாதிரி, அனைத்து வீடுகளுக்கும் அனுப்பிவைக்கப்படும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் வழங்கப்படும் வேட்பாளர்களின் பட்டியலில் அச்சிடப்பட்டுள்ளது.

2. அனைத்து வாக்காளர்களுக்கும் ஒரு வாக்கு உள்ளதோடு, அந்த வாக்கை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றுக்கு வழங்க முடியும்.

3. தான் வாக்களிக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்திற்கு முன்னால் அல்லது சுயேச்சைக் குழுவின் இலக்கம் மற்றும் சின்னத்திற்கு முன்னால் உள்ள வெற்றுக் கூண்டில் புள்ளடியை (இவ்வாறு "X") இட முடியும். அதன் பின்னர் அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களுக்கு தனது விருப்புக்களை அளிப்பதற்கு வாக்குச் சீட்டின் அடியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் குறித்தொதுக்கப்பட்டுள்ள தொடர் இலக்கத்திற்கு ஒத்த தொடரிலக்கம் உள்ள கூண்டின் மீது புள்ளடியை (இவ்வாறு "X") இட முடியும்.

4. வாக்காளர் ஒருவர் -

   I. அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு வாக்களிக்கும் போது, அல்லது

   II. ஒரு சுயேச்சைக் குழுவுக்கு மேற்பட்ட குழுக்களுக்கு வாக்களிக்கும் போது அல்லது

   III. அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கும் ஒரு சுயேச்சைக் குழுவுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கும் கலந்து வாக்களிக்கும் போது,
   அல்லது

   IV. தன்னை பின்னர் அறிந்துகொள்ள காரணமாக அமையக்கூடிய விதத்தில் ஏதேனும் குறியீட்டை வாக்குச் சீட்டில் இடும்போது,

அவரது வாக்குச் சீட்டு வெறிதானதாகக் கருதப்பட்டு எண்ணப்பட மாட்டாது.

5. வாக்களிப்பதற்கும் விருப்புக்களை அளிப்பதற்கும் "புள்ளடியை (X)" மாத்திரம் பயன்படுத்தவும்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்